Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு ! 6-1-1985 ஞாயிற்றுக்கிழமை (இரத்தாக்ஷி மார்கழி 22) முழக்கம் 165

### யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட

## இரு பொலிஸாரும் சென்னையில் இல்லை; ஐ. ஜி. பி. கைவிரிப்பு!

கடந்த மாதம் 21ம் திகதி யாழ்நகரில் வைத்துக் கடத்தப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான டெரன்ஸ் சில்வா, நாணயக்கார ஆகிய இருவரும் தமிழ்நாட்டில் இல்லையென தமிழ்நாட்டு ஐ. ஜி. பி. திரு கே. மோகனதாஸ் அறிவித்துள்ளார். கடத்தப்பட்ட இரு பொலிஸாரும் சென்னையில் இருக்கலாமென நம்பப்பட்டு அவர்களைக் கண்டுபிடிக்க திரு மோகனதாஸின் உதவி கோரப்பட்டதாக தமிழக பொலிஸ் இலாகாவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால். இவர்களைக் கடத்திய இயக்கத்தைக் கண்டுபிடிக்குமாறு திரு. மோகனதாஸிடம் இலங்கை பொலிஸ் மா அதிபர் கோரியதாக கொழும்புச் செய்திகள் முன்னர் தெரிவித்தன.

## இவ்வாரம் முதல் 'பர்மிட்' இல்லாமல் சைக்கிள் ஓடத் தடை! மீனவருக்கும் கடும் எச்சரிக்கை

பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாகனங்களைச் செலுத்துவதற்குப் 'பர்மிட்' எடுக்கும் நடைமுறை இவ்வாரத்திலிருந்து சைக்கிள்களுக்கும் அமுல்படுத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையத்தில் பர்மிட் எடுக்காத சைக்கிள்களை வீதிகளில் ஓட்டிச் செல்வது கண்டிப்பாகத் தடை செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கேற்ற வகையில் சைக்கிள்களுக்குப் பர்மிட் கொடுப்பதற்கான அனுமதிப் பத்திரங்கள் நாளை திங்கட்கிழமை முதல் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள்மூலம் விநியோகிக்கப்படுமென அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார். முதலில் அரச ஊழியர், அத்தியாவசிய சேவையுள்ளவர்களுக்கு மட்டுமே 'பர்மிட்' வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில் கண்காணிப்பு வலயத்துக்குட்பட்ட கடலில் மீன் பிடிப்பதற்கான தடை தொடர்ந்தும் அமுலில் இருப்பதாகவும், இதனை மீறி மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்பவர்கள்சுடப்படுவர் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பலாலி முகாமிலிருந்த 104 பேர் பூஸாவுக்கு அனுப்பப்பட்டனர்!

## 'கடவத்த' சீனிக் கப்பல் ஏற்றிச் சென்றது; நேற்று முன்தினம் 34 இளைஞர் விடுதலை

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ் மாவட்டத் தமிழ் இளைஞர்களில் 104 பேர் நேற்றிரவு கப்பல் மூலம் தென்னிலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் பூஸா இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிய வந்துள்ளது. காங்கேசன் துறைமுகத்துக்குச் சீனி ஏற்றி வந்த "கடவத்த" என்ற கப்பல் மூலமே இவர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து மூன்று பஸ்கள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்ட இவ்விளைஞர்கள், நேற்று மாலையளவில் காங்கேசன்துறை துறைமுகத்தில் நின்ற கப்பலுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்டவர்களும் இப்பட்டியலில் அடங்குவர் என்று தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னர் நேற்று முன்தினம் இங்கு தடுத்து வைத்திருந்தவர்களில் 34 பேர் விடுதலை செய்யப்பட்டனர். சுமார் மூன்று வாரமாக நடைபெற்ற தீவிரமான விசாரணைகளின் பின்னர் தீவிரவாத, பயங்கரவாத சம்பவங்களில் சம்பந்தப்படாதவர்களெனத் தெரியவந்த 34 பேரே விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று பூஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள், நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டவர்கள் பற்றிய பெயர், விபரங்கள் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்படலாம் எனத் தெரிய வந்துள்ளது.

## நேற்றுக் கைதானவர்களில் 12 பேர் தடுப்புக் காவலில்

யாழ்ப்பாணம் நகருக்குள் நேற்றுக் காலை கவச வண்டிகளிலும், மினிபஸ்களிலும் திடீரென நுழைந்த இராணுவத்தினரால் நகரம் சில மணி நேரம் அல்லோலகல்லோலப்பட்டது. நகருக்குள் நடமாடிய பெருந்தொகையான இளைஞர்கள் கைதாகிக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து நகரின் கடைகள் இழுத்து மூடப்பட்டன. சன நடமாட்டம் இன்றி மார்க்கட் பகுதி வெறிச்சோடியது.

கைதானவர்களில் பெரும்பாலானவரும் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டதாகவும், பன்னிரண்டு பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

### இளைஞர் கைது

(இருபாலை)

நேற்று நண்பகலளவில் கல்வியங்காடு, கட்டைப்பிராய் பகுதிக்கு நான்கு கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினர் நடத்திய சோதனையின் போது சட்டநாதர் வீதியில் வசிக்கும் கைலாசபிள்ளை குட்டி (26) என்ற இளைஞர்

—2-ஆம் பக்கம் பார்க்க

### திருமலையில் சிறில் மத்தியு சுவரொட்டி

(திருமலை)

திருமலையின் பல பாகங்களிலும் சிறில் மத்தியு ஆதரவுச் சுவரொட்டிகள் நேற்று ஒட்டப்பட்டிருந்தன. "சிறில் மத்தியு வெளியேற்றம் சிங்களவருக்குக் கிடைத்த தோல்வி;

—2-ஆம் பக்கம் பார்க்க

## லொறிச் சாரதி, கிளினர் துப்பாக்கி வேட்டுக்கு இரை: கச்சேரியடியில் பிடிபட்ட இளைஞனின் 'சயனைட்' மரணம்

நேற்று முன்தினமிரவு செம்மணிக்கு அண்மையில் வைத்து லொறியொன்றின் மீது ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதால் அதன் சாரதியும், கிளினரும் மரணமானார்கள்.

எழுதுமட்டுவாள் முகமாலையைச் சேர்ந்த சந்தையா பாலசுந்தரம் (சாரதி), கொடிகாமம் பாலாவி தெற்கு ஆறுமுகம் சந்திரசேகரம் (கிளினர்) ஆகிய இருவரது சடலங்களையும் ராணுவத்தினரே நேற்று ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். பிரேத பரிசோதனை இன்று நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ராணுவத்தினரிடம் பிடிபட்ட வாலிபர் ஒருவர் 'சயனைட்'

—2-ஆம் பக்கம் பார்க்க

## சாம்பல்தீவில் மூவருக்கு தந்திக்கம்ப மரணதண்டனை

(திருமலை)

திருமலை சாம்பல்தீவுப் பகுதியைச் சேர்ந்த மூவருக்குத் தீவிரவாத இளைஞர்கள் குழுவொன்றினால் நேற்றுமுன்தினமிரவு மரண தண்டனை வழங்கப்பட்டது.

ராஜு என்று அழைக்கப்படும் தர்மராஜா, ஆசிரியர் என அழைக்கப்படும் சண்முகராஜா ரஞ்சன் ஆகிய மூவருமே சமூக விரோதிகள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

— 2 ஆம் பக்கம் பார்க்க

### ராஜீவ் அனுப்பியுள்ள நன்றிச் செய்தி:

## இந்துமாகடல் பிராந்தியத்தில் உறவும் சமாதானமும் உருவாக உழைப்போம்!

இந்துமாகடல் பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளும் அணிசேரா இயக்கத்தின் உறுப்பினர்களாக உள்ளன இவையனைத்துக்குமுள்ள பிரச்சினைகளும் ஆசைகளும் ஒரே மாதிரியானவை எனப் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் இதனைத் தெரிவித்த ராஜீவ், இலங்கையும் இந்தியாவும கலாசாரம், வரலாறு, சம்பிரதாயப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பிணைக்கப்பட்டுள்ளன என்

—2-ஆம் பக்கம் பார்க்க

### திரி 'ஜீ' பற்றி ராஜீவ்

"காந்தி ஜீ, பண்டிட் ஜீ, இந்திரா ஜீ ஆகிய மூன்று உன்னத தலைவர்களும் கட்டிக்காத்த பாரம்பரியம், பண்பாடு ஆகியவைகளின் பாதையில் பாரதத்தின் ஜனநாயகத்தை பேணிக் காத்து ஆட்சி நடத்த திடசங்கற்பம் பூண்டுள்ளோன். பாரத மக்களின் பரிபூரண ஒத்துழைப்புக் கிடைக்குமென்பதில் எனக்கு நம்பிக்கை

—2-ஆம் பக்கம் பார்க்க

## றீகனின் நட்புச் செய்தி ராஜீவிடம் கையளிப்பு

(புதுடில்லி)

கடந்த வாரம் இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் விசேஷ தூதுவர் திரு சார்ள்ஸ் பேர்ஸி, நேற்றுப் புதுடில்லியில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் றீகன் அனுப்பியிருந்த விசேஷ செய்தியைத் திரு பேர்ஸி, பிரதமர் ராஜீவிடம் கையளித்தார்.

இரு நாடுகளுக்குமிடையே சினேகபூர்வ நட்புறவு நெருக்கமடைய தாம் விரும்புவதாக

—2-ஆம் பக்கம் பார்க்க

## பூஸா இளைஞர் கடிதங்கள்; பெற்றோர் நேற்று ஏமாற்றம்

(சுண்டுக்குளி)

காலி பூஸா முகாமில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமது பிள்ளைகளின் கடிதங்களைக் காண வேண்டுமென்ற ஆவலில் நேற்றுக் காலை யாழ் செயலகத்திற்கு விரைந்த பெற்றோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

யாழ். பிரஜைகள் குழு பூஸா முகாமிலுள்ள இளைஞர்களுக்கு உடுப்பு முதலியனவற்றை வழங்கிவிட்டு அவ்விளைஞர்கள் தமது பெற்றோருக்கு எழுதிய கடிதங்களுடன் சனிக்கிழமை

—2-ஆம் பக்கம் பார்க்க

### சுன்னாகத்தில் தேடுதல்

(வயாவிளான்)

சுன்னாகம் பகுதியை நேற்று முன்தினம் முற்றுகையிட்ட இராணுவத்தினர் அப்பகுதியில் உள்ள ஒருவரை அனை

—2-ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

## வியக்கத்தக்க முறையில் முதல்வர் எம்.ஜி.ஆர்.முன்னேற்றம்

(சென்னை)

தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் அழைப்பின் நியூயோர்க் புறப்பட்ட நிதியமைச்சர் நெடுஞ்செழியனும் தமிழக தலைமைச் செயலர் சொக்கலிங்கமும் நேற்று முன்தினம் பம்பாய் போய்ச் சேர்ந்தனர். அவர்கள் நேற்றுக் காலை நியூயோர்க் புறப்பட்டுச்சென்றனர் இதே வேளை புறூக்லின் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் தமிழக முதல்வரைச் சென்று பார்வையிட்ட அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் முதல்வரின் உடல்நிலை வியக்கத்தக்க முறையில் அபிவிருத்தியடைந்துள்ளது என்று கூறினர்.

### அமைச்சர் அத்துலத் முதலி அறிவிப்பு:

# பயங்கரவாதிகள் சரணடையும் வரை வடபகுதிச் சட்டங்கள் தளர்த்தப்படா!

''பயங்கரவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டுச் சரணடையும் வரை வடபகுதியில் நடைமுறையில் இருந்துவரும் கண்டிப்பான பிரமாணங்கள் எதுவும் தளர்த்தப்பட மாட்டாது. இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினைக்கும், இனப் பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வு காணும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதன் விபரங்களை இப்போதைக்கு வெளியிட முடியாது'' என்று நேற்று முன்தினம் அகலவத்தைத் தொகுதியில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

''தயாரிக்கப்படும் அந்த உத்தேசத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதும், அடுத்த ஜனவரியிலிருந்து பயங்கரவாதத்தை வேறு ஒரு கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டியிருக்கும். கொக்கிளாய், நாயாறு ஆகிய கிராமங்களிலிருந்து குடிபெயர்ந்த குடும்பங்களை மீண்டும் இதே மீன்பிடிக் கிராமங்களில் குடியமர்த்தப்படும் அவ்வாறு குமுழமுனை, செம்மலை ஆகிய கிராமங்களிலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் மீண்டும் இதே கிராமங்களில் குடியமர்த்தப்படுவார்கள். இதன் பின்னர் இந்தக் கிராமங்களில் மக்கள் அனைவரும் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதற்கு ஆவன செய்யப்படும் பயங்கரவாதிகள் மீண்டும் இவ்வாறு கிராமங்களைத் தாக்கினால் அவற்றின் சுற்றுப்புறங்களில் வசிப்பவர்களும் வெளியேற்றப்படுவார்கள் இப்பகுதிகளில் வாழ்பவர்களுக்குப் போதிய பாதுகாப்பும் வழங்கப்படும். எனவே இங்கு மீண்டும் பயங்கரவாதிகள் தாக்குவது சாத்தியமில்லை. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் ஸ்திரமடைந்தன யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து ஆயுதப் படையினரை விரட்டியடித்துவிட்டு ஜனவரி மாதம் பதினான்காம் திகதி தமிழ் ஈழத்தைப் பிரகடனம் செய்வோம் என்று பயங்கரவாதிகள் கூறினர்கள். இந்த மாதம் முதலாம திகதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படைகள் பலப்படுத்தப் பட்டுள்ளன தைப் பொங்கலுக்குப் பிறகும் வடபகுதியில் சிங்கக்கொடிதான் பறக்கும். பயங்கரவாதிகள் ஈழம் அமைக்கும் திகதியை ஏப்ரலுக்குப் பின் போட்டிருப்பதாகத் தற்போது கூறுகிறார்கள். ஆனால் இந்த நாட்டில் தன்னாதிக்கத்தையும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் சதாகாலமும் பேணிப் பாதுகாக்க நாம் ஆயத்தமாக இருக்கிறோம். வெறும் சொற்களினால் அல்ல. செயலினால் இதைச் செய்து காட்டுவோம் பயங்கரவாதிகளுக்கு எதிரான போராட்டம் தமிழ் மக்களுக்கெதிரான போராட்டமல்ல'' என்றும் அவர் வலியுறுத்திக் கூறினர்.

## சீக்கியர்களை விடுவிக்குமாறு பிரதம மதகுரு கோரிக்கை

அமிர்தசரஸ் பொற்கோயிலின் பிரதம குருவான சீக்கியத் தலைவர் இந்தியப் பிரதமரிடம் சீக்கியரது உயிர், உடைமைகளைப் பாதுகாக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். பஞ்சாப் பிரச்சினை குறித்து ஒரு உயர் குழு நியமிக்கப்பட்டது குறித்து கருத்து வெளியிட்ட பிரதம குரு பொற்கோயிலுள் ராணுவம் நுழைந்ததிலிருந்து சிறையிடப்பட்டுள்ள சீக்கிய அரசியல் வாதிகளனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்றும் சீக்கிய தலைவர்களை நிபந்தனையின்றி விடுவிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று இரவு வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் ராஜீவ் பஞ்சாப் பிரச்சினைக்கு தமது அரசு உச்ச முக்கியத்துவம் கொடுத்து விரைவில் அதன் தீர்வுக்கு வழிவகுக்குமென்று சொன்னார் சீக்கியர்களும் இந்தியாவின் ஏனைய மக்களோடு சமமாகவே மதிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட பிரதமர் நாட்டின் எப்பாகத்திலிருந்தாலும் அவர்களது உயிர், உடைமைகள் கட்டாயம் பாதுகாக்கப் படுமென்றும் உறுதியளித்தார்.

### சாம்பல்தீவில்..

—1-ம் பக்கத் தொடர்

நேற்று முன்தினமிரவு தமது வீடுகளிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்ட மூவரது சடலங்களும் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சாம்பல் தீவு தமிழ் மகாவித்தியாலயத்துக்கு அண்மையிலுள்ள தந்திக்கம்பங்களில் தனித்தனியாகக் கட்டப் பட்டிருந்தது. பொலிசாரும் இராணுவத்தினரும் இப்பகுதி முழுவதும் நேற்றுக் கடுமையான சோதனைகளை நடத்தினர்

### திருமலையில்...

—1-ம் பக்கத் தொடர்

அமிர்தலிங்கத்துக்கு கிடைத்த வெற்றி'' என்று இச்சுவரொட்டிகளில் சிங்களத்தில் எழுதப் பட்டுள்ளது.

### சுன்னாகத்தில்...

—1ஆம் பக்கத் தொடர்

வரிடமும் விசாரித்தனராம். தெரியாது என்று அனைவரும் சொன்னபின் அப்பகுதியில் வந்த இ. போ. ச. பஸ் ஒன்றை மறித்து அதில் இருந்து சில இளைஞர்களையும் அருகில் இருந்த கடைகளில் வேலை செய்த இளைஞர்களையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றனராம்.

### இந்து மாகடல்..

—1-ஆம் பக்கத் தொடர்

றும் அவற்றுக்கிடையே ஒத்துழைப்பு மேலும் விரிவடைய வேண்டுமென்றும் கூறியுள்ளார். இந்தப் பிராந்தியத்தில் சமாதானத்தை வளர்க்கவும் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும் என்றும் அவர் இச் செய்தியில் கேட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் றீகனுக்கு அனுப்பிய செய்தியில், இரு நாடுகளுக்கு மிடையே தொடர்ந்து ஸ்திரமான நல்லுறவையும் ஒத்துழைப்பையும் தாம் விரும்புவதாகக் கூறியுள்ள ராஜீவ் காந்தி சோவியத் பிரதமருக்கான செய்தியில் இந்தக் கருத்தோடு நெருக்கடியான நேரங்களில் பாரதத்துக்குத் தோள் கொடுத்து நின்ற சோவியத்தின் உதவியைப் பாரதம் ஒருபோதும் மறக்காது எனவும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியாஉல் ஹக்குக்கு அனுப்பிய செய்தியில் இலங்கை ஜனாதிபதியிடம் வேண்டியதுபோலவே இந்தப் பிராந்தியத்தில் சமாதானத்தையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் வளர்க்கப் பாடுபடவேண்டும் எனக் கேட்டுள்ளார் பிரதமர் ராஜீவ்.

### அரச அறிக்கை கூறுகிறது:

## முருங்கன் பொலிஸ்நிலையத் தாக்குதல் முயற்சி தோல்வி

முருங்கன் பொலிஸ் நிலையத்தைத் தாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு தீவிரவாதிகள் பொலிஸ் நிலையத்தின்மேல், குண்டு வீசித் தாக்க முற்பட்டபோது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அதனால் பொலிஸ் நிலையத்தைத் தாக்க வந்தவர்கள் ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் எவரும் இத்தாக்குதலின் போது காயமடையவில்லை எனவும் பொலிஸ் நிலையத்தின் வெளியே இரத்தக் சறைகள் காணப்பட்டதால் தீவிரவாதிகள் தரப்பில் சிலர் காயமடைந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாருடைய அடையாள அட்டை

உருத்திரபுரம் சிவநகர் நடராசா கருணாகரன் என்பவரது அடையாள அட்டை ரெக்ஸ் குலேந்திரன் என்பவரால் யாழ் நகர் பழைய பூங்கா வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்டுளளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

### ராமராவ் - ராஜீவ் சந்தித்தனா

ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் என். டி. ராமராவ் நேற்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து தேர்தலில் அவர் பெற்ற பெருவெற்றிக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாநில அரசோடு தமக்கு எதிர்ப்புக் கொள்கைகள் ஏதுமில்லையென்று ராமராவிடம் கூறிய ராஜீவ் மத்திய அரசின ஒத்துழைப்பு ஆந்திர முதலமைச்சருக்குக் கிடைக்குமென உறுதி கூறியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

### லொறிச் சாரதி...

—1-ம் பக்கத் தொடர்

குளிசை அருந்தி மரணமானாராம். இவரது சடலமும் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. கச்சேரியடியில் கைதான இவ்விளைஞர் ரவிசேகர் என்ற பெயருடையவர் என்று தெரியவந்துள்ளது.

இதற்கிடையே நேற்று முன்தினம் சுடப்பட்டு மரணமான தாமோதரம்பிள்ளை, ஞானசேகரன் ஆகிய இருவரது சடலங்களும் உறவினரிடம் நேற்று ஒப்படைக்கப் பட்டன. மூன்றாவது சடலம் சோமேஸ்வரன் என்ற வாலிபரது எனத் தெரியவந்துள்ளது.

### றீகனின்...

—1-ஆம் பக்கத் தொடர்

றீகன் தமது செய்தியில் அறிவித்திருந்தார். திரு. சார்ள்ஸ் பேர்ஸி விரைவில் இந்தியாவின் புதிய அமெரிக்கத் தூதராகப் பதவியேற்பார் எனவும் தெரிய வந்துள்ளது.

### பூஸா இளைஞர்...

— 1-ஆம் பக்கத் தொடர்

யாழ் செயலகம் வருவதாக அறிந்தே பெற்றோர் செயலகத்தை நேற்று அதிகாலையில் இருந்து முற்றுகையிட்டனர்.

காலி பூஸா முகாம் சென்ற யாழ் பிரஜைகள் குழுவினர் இன்னும் யாழ்ப்பாணம் வந்து சேராததால் ஆவலுடன் யாழ் செயலகத்திற்கு வந்திருந்த சாவகச்சேரி, கைதடி, மாதகல், பண்டத்தரிப்பு, ஆனைக்கோட்டை முதலியஇடங்களைச் சேர்ந்த பெற்றோர் ஏமாற்றத்துடனும் சோகத்துடனும் வீடு திரும்பியது பரிதாபகரமாகவிருந்தது.

## 28ம் திகதித் தேர்தலுக்கு பல புதிய அபேட்சகர்கள்

இருபத்தெட்டாம் திகதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள வட சென்னை லோக் சபா தொகுதியில் புதிதாக ராஜாங்க நாடார் என்னும் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரும் இருபது சுயேச்சை வேட்பாளர்களும் மனுதாக்கல் செய்துள்ளனர். ஏற்கனவே இத்தொகுதியில் காங்கிரஸ் சார்பில் முன்னாள் துணைச் சபாநாயகர் ஜி. லட்சுமணன் தி மு க. சார்பில் என். வி. என். சோமு மற்றும் ஏழுபேர் வேட்பாளர்களாக உள்ளனர்.

இதே தினத்தில் வாக்குப் பதிவு நடைபெற உள்ள பெரம்பூர், எழும்பூர் சட்டப்பேரவைத் தொகுதிகளில் தலா இரண்டுசுயேச்சை வேட்பாளர்கள் புதிதாக மனுதாக்கல்செய்துள்ளனர். இவற்றுள் பெரம்பூர் தொகுதியில் அ. தி. மு, க அமைச்சர் சத்தியவாணிமுத்து தி. மு. க வேட்பாளர் பரிதி இளம் வழுதி மூன்றுசுயேச்சைகள் எழும்பூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் ஸ்ரீராமுலு தி. மு. க வேட்பாளர் பாலு, இரண்டு சுயேச்சைகள் ஆகியோர் ஏற்கனவே வேட்பாளர்களாக உள்ளனர்.

### பொறியியலாளர் விடுதலையானார்

கடந்த 23 தினங்களாக பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபையின் பொறியியலாளரான நீக்கிலாப்பிள்ளை ஜெரோம் அருணகுமரன் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

### நல்லூர் சிவன் கோவிலில் நவக்கிரக பிரீதி

வியாழ மாற்றத்தை முன்னிட்டு நல்லூர் சிவன்கோவிலில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நவக்கிரகங்களின் பிரீதியின் போது, நவக்கிரக சோமமும், தெட்சணாமூர்த்திக்கும், வியாழபகவானுக்கும் விசேட ஜப ஹோம அபிஷேக ஆராதனைகளும் காலை ஏழு மணிமுதல் நடைபெறவுள்ளன.

### பிரார்த்தனையும் வழிபாடும்

சமீபத்திய கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பிரார்த்தனையும் வழிபாடும் வெள்ளிக்கிழமை காலை முதல் கொக்குவில் ஆறுகால்மடம் ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்றது. இதனை கொக்குவில் மேற்கு 16-ஆம் வட்டார பிரஜைகள் குழு ஏற்பாடு செய்திருந்தது

### கைதடிப் பகுதி வீதிகள் சோதனை

யாழ்ப்பாணம் நோக்கி நேற்று முன்தினம்எரிபொருள் பௌசர்களுக்கு பாதுகாப்பாக வந்த படையினர் அண்மையில் திருத்தப்பட்ட கைதடிப் பகுதி வீதிகளை துருவித்துருவி ஆராய்ந்து கொண்டே வந்தனர். இதனால் யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்களும், வாகனங்களும் பல மணி நேரம் தாமதித்தே வந்தன. படையினர் தமக்கு பாதுகாப்பாக பஸ்களையும், வாகனங்களையும் இடையிடையே நிறுத்தினர்.

### இளைஞர்...

—1-ஆம் பக்கத் தொடர்

கைது செய்யப்பட்டார்.

கட்டைப்பிராய்ப் பகுதியில் கலைமணி ஒழுங்கையூடாக சென்ற ராணுவத்தினர் அங்கும் சோதனைகள் மேற்கொண்டனர்.

### திரி 'ஜீ'...

—1-ஆம் பக்கத் தொடர்

யுண்டு'' என்று பிரதமர் ராஜீவ் காந்தி நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் நேற்றுநிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 57, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 6-1-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.